RND-A 7 | 7

தமிழ் நாடு அரசு

சுருக்கம்                006193

கல்வித் தகுதி – பொதுப் பணிகள் – அண்ணா பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் முதுநிலை பட்டய செயல்முறை ஆராய்ச்சியை (P.G.Diploma in Operation Research) முதுநிலைப் பட்டய கணிப்பொறி அறிவியலுக்கு (P.G.Diploma in Computer Science) சமமாக அங்கீகாரம் செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆர்) துறை,

அரசு ஆணை நிலை எண் 86                நாள் 2.4.1997.

படிக்கப்பட்டது:

1. அண்ணா பல்கலைக் கழகப் பதிவாளரது கடித எண் 32831/ஏ1/89, நாள் 10.4.1991.
2. அரசு ஆணை நிலை எண் 441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த துறை, நாள் 20.12.93.
3. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரின் க.எண்.7744/ஆர்/என்.டி.ஏ5/92, நாள் 17.9.1996.

---

ஆணை:

உதவிப் பேராசிரியர், விரிவுரையாளர் மற்றும் கணிப்பொறி தொடர்பான நியமனங்களுக்கு, கணிதம் மற்றும் இயற்பியலில் முதுநிலைப் பட்டப் படிப்புடன், கணிப்பொறி அறிவியலில் முதுநிலைப் பட்டயம் பெற்ற நபர்களுக்கு (M.Sc.(Maths) and (Physics) with Diploma in Computer Application) சமமாக அண்ணா பல்கலை கழகத்தால் வழங்கப்படும் முதுநிலைப் பட்டய செயல்முறை ஆராய்ச்சியை (P.G.Diploma in Operation Research) பெற்ற நபர்களை கருதி ஆணை வெளியிடுமாறு அண்ணா பல்கலைக் கழக பதிவாளர் அரசைக் கேட்டுள்ளார்.

2. அண்ணா பல்கலைக் கழகப் பதிவாளரது கோரிக்கை இதற்கென அரசாணை நிலை எண் 441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆர்) துறை, நாள் 20.12.1993-ன் மூலம் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் அமைக்கப்பட்ட குழுவின் (Committee) முன்னர் பரிசீலனைக்காக வைக்கப்பட்டது.

3. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் 19.8.1996 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் அண்ணா பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் முதுநிலை பட்டய செயல்முறை ஆராய்ச்சியை (Post Graduate Diploma in Operation Research) முதுநிலை பட்டய கணிப்பொறி அறிவியலுக்கு (Post Graduate Diploma in Computer Science) சமமாக கருதி கணிப்பொறி சம்பந்தமான வேலைகளுக்கு மட்டும் அங்கீகரிக்கலாம் என குழு தீர்மானித்து அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. கல்வி நிறுவனங்களால் அளிக்கப்படும் பட்டப் படிப்பு முதுநிலைப் பட்ட படிப்பு மற்றும் பிறக் கல்வித் திட்டங்களை அரசுப் பணிகளில் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் வரும் பணியிடங்களுக்கு நியமனம் செய்யும் கல்வி தகுதியாக தேர்வாணையக் குழுவால் அளிக்கப்படும் பரிந்துரை, தேர்வாணையத்தின் வரம்பிற்குட்படாத அரசின் பிற பணியிட நியமனங்களுக்கும் கல்வி தகுதியாக வரையறுக்கப்பட்டிருப்பின் பொருந்தும் என தேர்வாணையச் செயலர் தெரிவித்துள்ளார்.

/த.பி.பா/

4. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனைச் செய்து, பரிந்துரையை ஏற்றுக்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே அரசு அண்ணா பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் முதுநிலை பட்டய செயல்முறை ஆராய்ச்சியை முதுநிலைப் பட்டய கணிப்பொறி அறிவியலுக்கு சமமாக கருதி கணிப்பொறி சம்பந்தமான வேலைகளுக்கு மட்டும் அங்கீகரிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. பாஸ்கரதாஸ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

அனைத்துச் செயலர்கள், தலைமைச் செயலகத் துறை,
சென்னை-9.
அனைத்துத் துறை தலைமை அலுவலர்கள்.
பதிவாளர், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை-25.
செயலர், தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-2.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
அனைத்துப் பிரிவுகள், பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்தத் துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

[signature]
பிரிவு அலுவலர்.
2/4/77